ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# மரபுக் கவிதையும் கவிஞரும்

**முனைவர் ச. புனிதா**
**உதவிப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை**
**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி – 620 002**

**18**

**ஆய்வுச்சுருக்கம்**

மரபுக்கவிதையின் தோற்றம், அதன் வளர்ச்சி, மரபுக்கான விளக்கம், மரபு என்பதற்கு அறிஞர்கள் கொடுத்துள்ள அர்த்தம், மரபுக்கவிதையின் நோக்கம், மரபுக்கவிதையின் இன்றைய நிலை, கவிதைக்குரிய பொருள், மரபுக்கவிதைப் படைப்பாளர்கள், அவர்கள் எழுதிய கவிதைகள் போன்றவையும், மரபுக்கவிதையாளர்கள் வரிசையில் இடம்பெற்றுள்ள கண்ணதாசன், அவரின் கவித்துவம், அவர் இயற்றிய கவிதையில் தத்துவங்கள், வாழ்க்கைக்கு தேவையான வழிமுறைகள் போன்றவை இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

**கலைச் சொற்கள்**

ஈசன்-கடவுள், அஞ்சுதல்-பயம், ஞானம்-அறிவு, மாதர்-பெண்,உதிரம்-இரக்கம்,வெள்ளிப்பாற்குடம்-நட்சத்திரம்

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனச் சித்தரிக்கப்படும் சங்ககாலம், தமிழ்ப் புலவர்கள் நிறைந்த காலமாகும். ஆண்களுக்கு மட்டுமே கல்வி என்று போற்றப்பட்ட அக்காலத்தில் பெண்பாற்புலவர்களும் இலக்கிய ஆளுமைப்பெற்று திகழ்ந்தனர். இலக்கியங்களால் புலவர்கள், புலவர்களால் இலக்கியம் என்று ஒன்றுக்கொன்று தொடர்போடு இருந்த காரணத்தால் தான், தமிழ்மொழியானது செம்மொழி என்ற தகுதிப்பெற்றும், இலக்கிய வளமும் இலக்கண வளமும் குன்றாமல் காணப்படுகிறது. இதனடிப்படையில் தற்கால தமிழ் இலக்கியத்தின் முன்னோடியான பாரதி,

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்"**

என்றும், பாரததாசன்

**"தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்"**

என்றும் நெஞ்சாரத் திகழ்கிறார்.

பன்மொழிப் புலவரான கா.அப்பாதுரையார்,

**"திராவிட மொழிகளின் பழம் பெருமைக்கும்**
**கலப்பில்லாத தூய மொழிவளம், இலக்கிய வளம்**
**பண்பாட்டு வளம் ஆகியவற்றுக்கும் ஒரு சேம**
**அருங்கலச் செப்பமாக விளங்குவது தமிழே"**

என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றுகிறார்.

இவ்வாறு மனதில் தோன்றும் எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளை இலக்கிய நயம் ததும்ப அழகாக எடுத்துச் சொல்லும் முறையே கவிதை எனப்படும். அந்த வகையில் ஆரம்ப காலங்களில் இலக்கியங்களில் தோற்றம் பெற்ற கவிதைகளையே நாம் மரபுக் கவிதை என்கின்றோம். அதாவது இவை காலத்தால் முந்தியவையாகும். இவ்வாறான மரபு கவிதைகளின் தோற்றம் வளர்ச்சி மற்றும் இன்றைய நிலை தொடர்பாக இக்கட்டுரையில் காணலாம்.

**மரபு விளக்கம்**

"மரபு என்பது தேக்கம் அன்று; இடையறாது ஓடும் ஓர் இயக்கத்தின் பகுதி. தன்னைத் தானே அழித்துக் கொண்டு இலையும் தளிருமாய்ப் பரிணாமம் கொள்ளும் விதையைப் போலவும் வருங்காலத்துக்கு உரமாகிற வண்டலைப் போலவும் உருக்கி வார்த்து உபயோகிததுக் கொள்ள வாய்த்த ஆயுதக் கூடம் போலவும் அனுபவங்கள் பழுத்த அன்பார்ந்த தோழுனைப் போலவும் மரபு நம்மோடு உறவாடுகின்றது"[1] என்கிறார் சிற்பி பாலசுப்பிரமணியம்.

மேலும் "மரபு மரணத்தின் தூதுவன் அல்ல; ஜீவிதத்தின் தொடர் ஒட்டப்பந்தயத்தில் ஓர் அடுத்த தலைமுறையைத் தூண்டிவிடுகிற கிரியா ஊக்கி"[2] என்கிறார்.

கவிஞர் கண்ணதாசன் "கவிதை என்பது உணர்ச்சியின் பிரவாகம், கட்டவிழ்ந்து துள்ளிவரும் சிந்தனைகள், சொற்கோலமாக வருவதே கவிதை"[3] என்று ஒரு சொற்பொழிவில் கூறியதாக நினைவு.

**"பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல்போல் பல**
**சொல்லால் பொருட்கு இடனாக உணர்வினின்**
**வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"**

எனக் கவிதை இன்னதென்று நன்னூலாசிரியர் பவணந்தியார் வரையறுத்துள்ளார். இதில் யாக்கைக்கும் கவிதைக்கும் ஓர் ஒப்புமை கூறப் பெற்றுள்ளது. தோல், குருதி, தசை, எலும்பு முதலிய தாதுக்களால் ஆன உடல் உயிர்க்கு உடலாக இருப்பது போல, பலவகைச் சொற்களால் பொருளுக்கு இடனாகக் கல்வியறிவியல் வல்லோரால்அணிபெறச் செய்யப் பெறுவதே கவிதையாகும்.

**கவிதைக்குரிய பொருள்**

கவிதைக்குரிய பொருளில் வரையறையே இல்லை. எந்தப் பொருளைப் பற்றி வேண்டுமானாலும் கவிதை தோன்றும் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையவர்களும்

**"அலகில் சோதி யான - ஈசன்**
**அருளி னாலே அமையும்**
**உலகில் எந்தப் பொருளும் - கவிக்கு**
**உரிய பொருளா மையா"**

என்று கூறியிருப்ப ஈண்டு சிந்தித்தற்குரியது. பாடுவோரின் அநுபவத்திற்கேற்ப எல்லாம் கவிதைக்குரிய பொருளாக அமையலாம். உலகம் தோன்றிய நாள்தொட்டு இன்று வரையிலுமுள்ள பழம் பொருளான இருசுடர், விண்மீன், கருமுகில், மலை, காடு, ஆறு, கடல், மான், முயல்,கிளி, முயல் குழந்தை முதலியவை கவிதைப் பொருள்களாக அமைந்துள்ளன. அங்ஙனமே காதல், வீரம், இன்பம், துன்பம் போன்றவையும் பாட்டில் அமைகின்றன.

**கவிதை மனநிலை**

கவிதை என்பது காணும் பொருள்களை வருணிப்பதில் இல்லை. அப்பொருள்களைக் காணுங்கால் அவனிடம் எழும் மனநிலையில் உள்ளது. அதே மனநிலைக்கு ஒரு வடிவம் கொடுத்து அழகிய சொற்களால் ஓவியமாக அமைப்பதே கவிதையாகும்.

கவிதையைப் படிக்கும்

நம்மிடத்திலும் அதே மனநிலையை உண்டாக்க வல்லது கவிதை. "உணர்ச்சி, கற்பனை, ஒலிநயம், அணிநலன்கள், தொடைநயம், சுவைகள் முதலியவை அமையச் செந்தமிழ்ச் சொற்களால் நல்ல வடிவத்துடன் அமைவதே கவிதை அல்லது பாட்டு ஆகும்"4 என்கிறார் ந. சுப்பு ரெட்டியார்.

மேலும் "கற்பனையின் தத்துவம் அறிவுக்கு எட்டாதது, சொற்களால் உணர்த்த முடியாதது, சொற் கோட்டைக்குள் அடங்காதது, அதன் பலன்களைக் கொண்டே அஃது அறியப்படுவதொன்றாகும்"5 என்கிறார்.

அறிஞர் அரிஸ்டாடில் "பொருள்களை வகைப்படுத்திக் காணும்போது ஒவ்வொரு வகைக்கும் உரிய தனிக்கூறுகளைத் துல்லியமாக வேறுபடுத்திக் காண்பது அறிஞர்களுக்குரிய இலக்கணமாகும். இத்தகைய துல்லியமான வேறுபாட்டை அறிந்து கொள்ள இடந்தரும் பொருட்களை மட்டும் அறிஞர்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்"6 என்கிறார்.

"எழுத்திலக்கியப் படைப்புகளை முதன்மை ஆதாரகங்களாகக் கொண்டு அவற்றில் பயிலும் சமூக நிறுவனங்களை முதன்மைப்படுத்தி ஆராயக் கூடிய ஓர் ஆய்வுமுறையைத்தான் 'பொயத்தோஸ்' என்றும் மானுடவியல் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகிறார். இலக்கியத்தின் ஊடாக மக்களையும் அம்மக்களுடைய வெளிப்பாடுகளையும் பற்றி மேற்கொள்ளப்படும் ஆய்வுதான் இலக்கிய மானுடவியல் என்பதாகும்"7என்கிறார் ஆ.தனஞ்சயன்

அரசர்களின் ஆட்சி முறை மறைந்து ஆங்கிலேயனின் ஆட்சி ஓங்கிய காலம் ஐரோப்பியர்களின் வருகை நிகழ்ந்த காலம் ஐரோப்பியர்களின் வருகையினால் மாறுதல்களைச் சந்திக்கத் தொடங்கிய தமிழ் இலக்கியம் முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய பாதைக்குச் செல்ல வேண்டிய தருணம் ஏற்பட்டது. இவ்வகையான மாற்றம் முதலில் கவிதையில் துவங்கியது. மரபினை ஒட்டியும், ஒட்டடாமலும் கவிதைகள் களம் கண்டன. கவிதை மட்டுமின்றி உரைநடை, புதினம், சிறுகதை, நாடகம் என்ற பல நிலையிலும் விரிந்து வளர்ந்து நின்றது தமிழ் இலக்கியம்.

காலம் காலமாகச் செய்யுள் வடிவிலான கவிதை இலக்கியம் மட்டுமே தமிழ் இலக்கிய உலகம் அறிந்திருந்த வேளையில் இடையில் அம்மரபு நிலைகளில் சில மாற்றங்கள் நிகழத் தொடங்கின. கவிதை என்பதே காண முடியாதோ என்பதனைப் போன்ற ஒரு நிலை 17-ம் நூற்றாண்டுகளில் துவங்கிய போது 18-ம் நூற்றாண்டுகளில் தோன்றிய சில கவிதைக்கு மட்டுமின்றிக் கவிதை நடைக்கும் புத்துயிர் ஊட்டி வாழச் செய்தனர்.

**மரபுக் கவிதையின் தோற்றம்**

மரபுக் கவிதையின் தோற்றம் பற்றி நோக்கும் போது தமிழ் இலக்கியங்களில் 3000 வருடங்களுக்கு மேலாக மிகவும் தொன்மையான நூலாகிய தொல்காப்பியத்தில் செய்யுள் தொடர்பான சொல், எழுத்து, அகம், புறம், யாப்பு, அணி என்பன பற்றி எல்லாம் குறிப்பிட்டுள்ளமையானது செய்யுள் எனும் மரபுக் கவிதை வடிவத்தின் பழமையையே எடுத்துக்காட்டுகின்றது. அந்த வகையில் பல்வேறு அறிஞர்களின் கருத்துப்படி மரபுக் கவிதையின் தோற்றம் 5000 வருடங்களுக்கு மேலானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மரபுக் கவிதைகளின் நோக்கம்**

பொதுவாக சங்க காலங்களில் தோன்றிய மரபுக் கவிதைகள் மன்னர்களது வீரம், கொடை, காதல், ஆட்சி சிறப்பு போன்றவற்றை எடுத்து கூறும் நோக்கம் கொண்டதாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து

இடைக்காலத்தில் பக்தியின் மறுமலர்ச்சியின் காரணமாக அக்காலத்திய கவிதைகளின் நோக்கமானது இறைவனை பற்றியதாகவும், இறைவன் குடி கொண்டிருக்கக் கூடிய திருத்தலங்களைப் பற்றியதாகவும் அமைந்திருந்தது.

அதனை அடுத்த காலங்களில் மருத்துவம், தத்துவம் சார்ந்ததாகவும் கவிதைகள் எழத் தொடங்கின. இந்த வகையில் மரபுக் கவிதைகள் அந்த அந்த காலங்களுக்கு ஏற்ற வகையில் தங்களுடைய நோக்கங்களை கொண்டிருந்தமையைக் காணலாம்.

**மரபுக் கவிதைகளின் வரலாற்று வளர்ச்சி**

ஆரம்ப காலம் தொட்டு சுமார் 19 ஆம் நூற்றாண்டுக்கு வரைக்கும் இலக்கியம் என்றாலே மரபுக் கவிதை தான் எனும் அளவுக்கு மரபுக் கவிதைகளின் செல்வாக்கு மிகுந்து காணப்பட்டது. சங்க காலங்களில் அகவல் பாவம், நீதி இலக்கியங்களில் வெண்பாவும் கொண்டு காணப்பட்ட மரபு கவிதைகள், பிற்பட்ட காலங்களில் குறிஞ்சி, விருத்தம், பள்ளு போன்ற இலக்கிய வடிவங்கள் பெற்று சிந்துபாவினை கொண்டு வடிவமைக்கப்பட்டது. இவ்வாறாக மரபுக் கவிதைகள் குறிப்பாக இருபதாம் நூற்றாண்டில் புதுக்கவிதைகளின் தோற்றம் வரையிலும் பல்வேறு வடிவங்களில் வளர்ச்சி பெற்று வந்திருப்பதனைக் காணலாம்.

**மரபுக் கவிதைகளின் இன்றைய நிலை**

புதுக்கவிதைகளின் போக்கு இன்றைய காலகட்டங்களில் மிகவும் அதிகமாகவே காணப்படுகின்ற போதிலும், இன்னும் சில அறிஞர்கள் இன்றும் கூட மரபுக் கவிதைகளின் பாங்குகளில் தங்களுடைய கவிதைகளை வடிவமைப்பதனை காணலாம்.

அந்த வகையில் பாரதியார் பிள்ளைத்தமிழ், காமராசர் பிள்ளைத்தமிழ், சிவாஜி கணேசன் பிள்ளைத்தமிழ் மற்றும் மருதூர் அரங்கராசனின் யாப்பறிந்து பாப்புனைய எனும் நூல் போன்றவற்றில் இன்றும் மரபுக் கவிதையின் செல்வாக்கு காணப்படுகின்றது.நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகவும் தொன்மையானதாக விளங்குவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்நூல் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப் பெறுகின்றது. இதற்கும் முந்தையனவாக இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன. அவ்விலக்கண நூல்கள் 'எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவது போல' இலக்கியத்திலிருந்து இலக்கண நூல்கள் ஏற்படுகின்றன என்னும் விதிக்கு இணங்க, தமக்கு முற்பட்ட இலக்கியங்களைக் கொண்டு இலக்கணம் வகுத்தனவாகும். இலக்கண நூல்களில் செய்யுள் தொடர்பான எழுத்து, சொல், அகம்-புறம் என்னும் பாடுபொருள் குறித்த செய்திகள், யாப்பு, அணி ஆகியன பற்றிய வரையறைகள் இடம் பெற்றிருக்கும். எனவே இவற்றைக் கருதிப் பார்க்கும்போது, செய்யுள் என்னும் கவிதை வடிவம் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுக்காலத் தொன்மையுடையது என உறுதிபடக் கூறலாம்.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகியன குறித்த இலக்கணங்களைத் தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. இறையனார் களவியல் உரையில் மறைந்து போன சங்க நூல்களின் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. முதுகுருகு, முதுநாரை, களரியாவிரை ஆகிய தலைச் சங்க நூல்களும், கலி, குருகு, வியாழமாலையகவல், வெண்டாளி ஆகிய இடைச் சங்க நூல்களும் அவ்வகை நூல்களுள் அடங்கும். சிற்றிசை, பேரிசை என்பன கடைச்சங்கத்தில் இருந்து மறைந்தவற்றுள் அடங்கும். 'மறைந்துபோன தமிழ்நூல்கள்' என மயிலை சீனிவேங்கடசாமி, இவ்வகை நூல்கள் குறித்துத் தனியொரு நூலே எழுதியுள்ளார். அவற்றின்;வழி மரபுக்கவிதையின் தொன்மையை நன்கு அறியலாம்.

**'தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்**
**சூழ்கலை வாணர்களும் - இவள்**
**என்று பிறந்தவள் என்றுண ராத**

**இயல்பின ளாம்எங்கள் தாய்'**

எனப் பாரதியார் பாடும் பாடல், மரபுக்கவிதையின் காலத் தொன்மைக்கும் பொருந்தக் கூடியதாகும். இதனை ஆராய்வதே இதன் நோக்கமாகும்.

**மரபுக்கவிதை படைப்பாளர்களும் நூல்களும்**

இவ்வாறு இரு வகையாகப் பிரிக்கப்பட்ட கவிதைகளைப் படைத்தவர்கள் பற்றியும், அவர்களது நூல்களைப் பற்றியும் இனிக் காணலாம்.

பாரதியார் - பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு

**"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருத்தலால்**

**செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"**

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை - ஆசியசோதி, மருமக்கள்வழி மான்மியம்

**"ஓடும் உதிரத்தில் வடிந்து ஒழுகும் கண்ணீரில்**

**தேடிப்பாத்தாலும் சாதி தெரிவதுண்டோ அப்பா?**
**எவர் உடம்பினிலும் சிவப்பே இரத்த நிறமப்பா**
**எவர் விழி நீர்க்கும் உவர்ப்பே இயற்கைக் குணமப்பா**

**பிறப்பினால் எவர்க்கும், உலகினில் பெருமை வராதப்பா!**

**சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டுமப்பா"**

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை - தமிழன் இதயம்,கவிதாஞ்சலி

**"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது**

**சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்"**

பாரதிதாசன் - பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, குடும்பவிளக்கு, அழகின் சிரிப்பு

**"நீலவான ஆடைக்குள் உடல் மறைத்து**
**நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை**

**கோலமுழுதும்காட்டி; விட்டால் காதற்**

**கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்**
**சோலையிலே பூத்ததனிப் பூவோ! நீதான்**

**சொக்க வெள்ளிப் பாற்குடமோ! அமுத ஊற்;றோ!**

**கானவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்**

**கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!"**

கண்ணதாசன் - இயேசு காவியம், மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி

**"நேற்றுவரை நீயாரோ நான் யாரோ**

**இன்று முதல் நீ வேறோ நான் வேறோ"**

சுத்தானந்த பாரதியார் - பாரதசக்தி மகாகாவியம், தமிழ்த் திருப்பாவை

**"வாடி உதிர்ந்த மலரைக் கண்டும்**
**வாழ்வை நம்பவோ கண்ணே**
**கோடி உயிரைச் சாவு நாளும்**
**கொண்டு போகுதே"**

சுரதா - சிரிப்பின் நிழல், தேன்மழை, துறைமுகம்

**"சுனை ஒன்றில் பூத்தபல மலர்கள் போன்று**
**சூழ்ந்துள்ள புலவர்களே! நீங்கள் எல்லாம்**
**'பனி' யென்பீர், 'நிலாவழிக்கும் வியர்வை' என்பேன்;**
**'கனி' யென்பீர், 'விதைக் குடும்பம்' என்பேன்; நீலக்**
**கடலென்பீர், மண்மகளின் ஆடை' யென்பேன்;**
**தனிநின்று புதுமைபல செய்யும் என்னைத்**
**தக்கையென நினைக்காதீர்"**

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

"**விதியென்னும் குழந்தை கையில் உலகந்தன்னை**
**விளையாடக் கொடுத்துவிட்டாள் இயற்கை அன்னை**
**வருவனவும் போவனவும் விதியென்று வைத்தவன்**
**வாழ்வினை விதைத்த உழவன் அவன்**
**அறுவடைக் காலத்தில் அழுதாலும் தொழுதாலும்**
**அனுதாபங்காட்டு வானோ?"**

**கண்ணதாசன் கவிதைகளில் தத்துவம்**

**இறைதத்துவம்**

குமரகுருபரர் கடவுளை விட கவிஞன் உயர்ந்தவன் என்பார். ஏனெனில் கடவுள் படைத்த மனிதன் மறைவான் /மாள்வான். ஆனால் மனிதன் படைத்த பனுவலோ அழியாத அமர காவியமாகும். இத்தகு சிறப்புப் பெற்றதே கண்ணதாசனின் தத்துவ பாடல்கள்.

**"பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு ராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு,**
**புரியாமலே இருப்பான் ஒருவன் .அவனைப் புரிந்து கொண்டால் அவன் தான் இறைவன்"**

என்று அழகுற இறைத் தத்துவத்தை தன் கவிதையின் மூலமாக நமக்கு உணர்த்தி இருப்பார்.

**"ஊட்டுவிப்பானும் உறங்குவிப்பானும் ஆட்டுவிப்பானும்**
**இறைவன்"**

என பட்டினத்தார் கூறியதை உள் வாங்கி,

**"தூணிலும் உளன் /துரும்பிலும்"**

எனக் கம்பன் சொல்வதை மெய்ப்பிக்க, தெய்வம் இருக்கும் இடமாக கண்ணதாசன் கொடுத்த இறை தத்துவப் பாடலே ,

**"தெளிந்த நினைவும் திறந்த நெஞ்சும் நிறைந்ததுண்டோ**
**அங்கே" .**

**நிலையாமை தத்துவம்**

இந்த பூமியில் எதுவும் நிலையில்லாதது என்பதை உணர்த்த

**"வந்ததை வரவில் வைப்போம் /சென்றதை செலவில்**
**வைப்போம்"**

என்ற பாடல் மூலமாகவும் ,

**"வீடு வரை உறவு /வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை/**
**கடைசி வரை யாரோ?"**

என்ற பாதகாணிக்கை படத்தின் பாடல் மூலமாகவும்,

**"போனால் போகட்டும் போடா /இந்த பூமியில் நிலையாய்**
**வாழ்ந்தவர் யாரடா?"**

என்று பாலும் பழமும் படத்தில் வரும் பாடல் மூலமாகவும் நிலையாமை தத்துவத்தை நமக்கு நினைவில் நிறுத்திக் காட்டுகிறார் கவிஞர் கண்ணதாசன்.

**கடமைதத்துவம்**

**"கடமையை செய்**
**பலனை எதிர்பாராதே"**

என்று கீதை சொன்ன அறிவுரையை மனதில் கொண்டு எல்லாம் உனக்காக என்ற படத்தினிலே கடமை தத்துவமாக

**"கடமையை செய்வோம்**
**கவலையை மறப்போம்**
**கிடைப்பது கிடைக்கட்டும்**
**தோழர்களே!"** என்று அழகுற கூறியிருப்பார் கவிஞர் கண்ணதாசன்.

**வாழ்வியல் தத்துவம்**

கருவறை முதல் கல்லறை வரையிலான வாழ்க்கைப் பயணத்தைப் பற்றி அழகுற வாழ்வியல் தத்துவமாக சித்தி என்ற படத்தில்

**"இங்கே தெய்வம் பாதி**
**மிருகம் பாதி மனிதன் ஆனதடா**
**அதிலே உள்ளம் பாதி**
**கள்ளம் பாதி**
**உருவம் ஆனதடா!"**

என்றும், லட்சுமி கல்யாணம் படத்தில்

**"வாழும் மிருகம்**
**தூங்கும் தெய்வம்**
**நடுவே மனிதனடா!"**

என்றும்,பனித்திரை படத்தில் ,

**"ஏதோ மனிதன் பிறந்துவிட்டான்**
**ஏனோ மரம் போல் வளர்ந்து விட்டான்!"**

என்றும், கவலை இல்லாத மனிதன் படத்தில்,

**"போவதைக் கண்டு கலங்காமல் வருவதைக் கண்டு மயங்காமல்**
**மெய் தளராமல்/கை நடுங்காமல் உண்மையை/பொய்யை**
**உணர்ந்தவனே கவலையில்லாத மனிதன்!"**

என்றும், பலே பாண்டியா படத்தில்,

**"வாழ நினைத்தால் வாழலாம்**
**வழியா இல்லை பூமியில்**
**ஆழக் கடலும் சோலையாகும் ஆசையிருந்தால் நீந்தி வா"**

என்றும்,

**"என்னடா துன்பம்**
**அதை எட்டி உதை**
**வாழ்ந்து பார்**
**எப்போதும் உன்னை நம்பி!"**

என்றும் ,

**"போற்றுபவர் போற்றட்டும்**
**புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன் .**
**ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால் எடுத்துரைப்பேன்**
**எவர் வரினும் நில்லேன்" எனும்**
**வாழ்வியல் தத்துவத்தை**
**நமக்கு அளித்த தத்துவஞானி!**

**உண்மை தத்துவம்**

**"தெள்ளத் தெளிந்த தமிழில்**
**உண்மை தெரிந்துரைப்பது கவிதை"**

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை சொன்னதை நினைந்து,

**"ஊருக்கு நல்லது சொல்வேன் எனக்கு உண்மை தெரிந்தது**
**சொல்வேன்!"**

என்ற பாரதியின் வார்த்தைகளை பிரதிபலிப்பதான தத்துவப் பாடல்களில் முதல் பாடலே உண்மை தத்துவத்தை உணர்த்தும் படியான

**"உள்ளதை சொல்வேன்**
**சொன்னதை செய்வேன்**
**வேறொன்றும் தெரியாது .**

**உள்ளத்தில் இருப்பதை வார்த்தையில் மறைக்கும் கபடம்**

**தெரியாது"**

என்ற தத்துவப் பாடலில்

உண்மை/நேர்மை/சத்தியத்தை விளக்கியவர் கவிஞர் கண்ணதாசன்.

சுமைதாங்கிபடத்தில்
மனிதனை பக்குவப்படுத்தும் விதமாக

**"உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி**

**நாடு"**

என்றும் சாக்ரடீஸ் சொன்ன உன்னையே நீ அறிவாய் என்பதை மனதில் வைத்து,

வேட்டைக்காரன்படத்தில்

**"உன்னை அறிந்தால்**

**நீ உன்னை அறிந்தால்**

**உலகத்தில் போராடலாம்!"**

என்றும், நெஞ்சில் ஒரு ஆலயம் படத்தில்,

**"நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை!**

**நடந்ததையே நினைத்திருந்தால்**

**அமைதி என்றுமில்லை!"**

என்றும் மனதை ஆசுவாசப்படுத்தும் பரிகாரப் பாடலாக தத்துவத்தை அளித்திருப்பார்.

**உறவுகளில் தத்துவம்**

**"அண்ணன் என்னடா**

**தம்பி என்னடா**

**அவசரமான உலகத்திலே"**

என்ற பாடல் மூலமாகவும்,

**" தென்னையப் பெத்தா இளநீரு பிள்ளையப் பெத்தா கண்ணீரு"**

**"பானையில சோறிருந்தா**

**பூனைகளும் சொந்தமடா**

**சோதனையைப் பங்கு வச்சா சொந்தமில்லே பந்தமில்லை!"**

என்ற பாடல் மூலமாகவும் உறவுகளின் தத்துவத்தை தெளிவாக உணர்த்தி இருப்பார்.

**முடிவுரை**

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல் தோறும் வேதனை இருக்கும்

வந்த துன்பம் எதுவென்றாலும்

வாடி நின்றால் ஓடுவதில்லை
எதையும் தாங்கும் இதயம் இருந்தால் இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்

என்ற கண்ணதாசனின் தத்துவ வரிகளை மனதில் நிறுத்தி அமைதியான வாழ்வை மண்ணில்

இருக்கும்வரை வாழ்ந்து முடிப்போம்!

**சான்றெண் விளக்கம்**

1. சிற்பி பாலசுப்பிரமணியம், கவிதை நேரங்கள், ப.58
2. மேலது, ப.58
3. கே.ஜீவபாரதி, காலமும் கவிஞர்களும், ப.10
4. ந.சுப்பு ரெட்டியார், கவிதையின் தோற்றம், ப.50
5. மேலது, ப.51
6. அ.அ.மணவாளன், இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள், ப.10
7. ஆ.தனஞ்சயன். தமிழில் இலக்கிய மானிடவியல், பக். 18-19